பல்கலைக்கழகங்களிலே படிப்பவர்களுக்கும் கல்வித் திறமை இருக்கிறது. நான் மறுக்கவில்லை. அவர்களும் எதிர்பார்ப்புடன் சிலவற்றைப் படிக்கின்றார்கள். ஆனால் சில நேரங்களிலே என்ன ஆகிறது என்றால், அவர்கள் படித்தது இளங்கலையிலே வேறு, முதுகலையிலே வேறாக இருக்கிறது. அது ஒரு குறைபாடாக இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், திறந்தவெளி பல்கலைக்கழகங்களிலே பார்த்தால், வயது வரம்பு ஒன்றுதான் வைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் நேரடியாக எம்.ஏ எழுதலாம், எம்.எஸ்சி எழுதுவதற்கு எல்லாம் வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது. அப்படி எழுதுவதன் மூலமாக தேர்வில் வெற்றி பெற்றுவிடலாமேயொழிய, அவர்கள் பாடத்தைக் கற்பிப்பதற்கு அடிப்படையான, இளங்கலை போன்ற பாடங்களைப் படிக்காததன் காரணமாக சில பிரச்சினைகள் பள்ளிகளிலே இருக்கின்றன. அதற்காகத்தான் இந்த வரைமுறையை நாங்கள் தந்திருக்கிறோமேயொழிய, வேறல்ல. ஒரு பட்டம் பெறுவதற்கு நாட்டிலே யாரும் படிக்கலாம். கல்வியறிவைப் பெற்றுக்கொண்டு, தங்கள் திறமையை வளர்த்து, பட்டங்கள் பெறுவதெல்லாம் வரவேற்க வேண்டிய ஒன்றுதான். ஆனால் அந்தப் பட்டங்களைப் பெற்று விட்டதனாலேயே அவர்களுக்கு இந்த வேலையைத் தர வேண்டும் என்பதை நாம் ஏற்றுக்கொள்ளமுடியாது. ஆகவே நடைமுறையிலே இருக்கிற சிக்கலை வைத்துத்தான் இத்தகைய முறையைக் கொண்டு வந்திருக்கிறோம். இதிலே ஏதாவது சிக்கல் இருந்தால், இதைப்பற்றி, அரசு என்ன என்பதைச் சீர்தூக்கிப் பார்க்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) நீலகிரி மாவட்டத்தில் பெய்த பனிக்கட்டி மழையினால் தேயிலைச் செடிகள் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு, திரு. கா. கந்தசாமி அவர்கள் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. கா. கந்தசாமி.

திரு. கா. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், கோத்தகிரி, உதகமண்டலம் பகுதிகளில் அண்மையில் பெய்த பனிக்கட்டி மழையினால் ரூ.25 இலட்சம் மதிப்புள்ள தேயிலைச் செடிகள் பாதிக்கப்பட்டுள்ளது" குறித்த, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

2002 மே 2]

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரிவான அறிக்கை அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

நீலகிரி மாவட்டத்தில் 4-4-2002 அன்று பிற்பகல் எதிர்பாராதவிதமாகப் பெய்த ஆலங்கட்டி (பனிக்கட்டி) மழையினால் உதகை வட்டம் தும்மனட்டி கிராமத்தைச் சேர்ந்த மைனலை, பேரர் கரடிக்கட்டு மற்றும் புதுத்தோட்டம் ஆகிய பகுதிகளில் தேயிலை, உருளைக்கிழங்கு, பட்டாணி, கேரட், வெள்ளைப் பூண்டு, பீன்ஸ் போன்ற பயிர்கள் சேதமடைந்துள்ளன எனவும், இதனால் 370 விவசாயிகள் பாதிப்பு அடைந்துள்ளனர் எனவும், பயிர்கள் சேதம் ரூ.10.65 இலட்சம் எனவும், உதகை தோட்டக்கலை இணை இயக்குநர் நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார். கீழ்க்கண்டவாறு நிலப்பரப்புகளில் பயிர்ச் சேதம் அடைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது:

வ.எண்	பயிர்	பாதிப்படைந்த பரப்பு ஹெக்டேரில்
1.	தேயிலை	121.84.0
2.	உருளைக்கிழங்கு	3.97.0
3.	வெள்ளைப் பூண்டு	0.76.0
4.	பீன்ஸ்	1.82.0
5.	பட்டாணி	3.90.0
6.	கேரட்	3.34.0
	மொத்தம்	**135.63.0**

இப்பயிர்ச் சேதம் குறித்து மாவட்ட வருவாய் அலுவலர், குன்னூர் கோட்டாட்சியர், தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் மற்றும் வேளாண்மை வளர்ச்சி இயக்குநர் ஆகியோரும் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

2. எதிர்பாராதவிதமாகப் பெய்த ஆலங்கட்டி மழையினால் தேயிலைச் செடிகள் பொறுத்தமட்டில் ஒரு முறை பறிக்கப்படும் கொழுந்துகள் மட்டுமே பாதிக்கப்பட்டுள்ளன என்றும், மற்றும் தேயிலைச் செடிகள் நல்ல நிலையில் உள்ளன என்றும் நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கை அளித்துள்ளார். இதுபோன்ற

[திரு. ந. தளவாய் சுந்தரம்] [2002 மே 2

ஆலங்கட்டி மழை, இப்பகுதியில் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்புதான் பெய்ததாக இப்பகுதியில் உள்ள விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் கோடை மழையின்போது ஏதாவது ஒரு பகுதியில் சிறிய அளவில் ஆலங்கட்டி மழை பெய்துள்ளது என்றும் ஆனால் பயிர்ச் சேதங்கள் ஏற்படும் அளவிற்கு ஆலங்கட்டி மழை கடந்த 30 ஆண்டுகளில் பெய்ததில்லை என்றும் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார். மேலும் 4-4-2002 அன்று தும்மனட்டி கிராமத்திலும் உதகை வட்டத்தில் தீட்டுக்கல் மற்றும் நகரப் பகுதிகளிலும், கோத்தகிரி வட்டத்தில் ஜெகதளா, அருவங்காடு ஆகிய பகுதிகளிலும் மழை பெய்துள்ளது. ஆனால் அப்பகுதிகளில் குறிப்பிடத்தக்க பயிர்ச் சேதங்கள் ஏதுமில்லை. மேலும், தும்மனட்டி கிராமத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தக்க நிவாரணத் தொகை வழங்க கருத்துரு ஒன்று அனுப்பப்படும் என்று நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளதாக இணை ஆணையர் (நில வருவாய்) கூறியுள்ளார்.

3. முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரிடமிருந்து பெறப்படும் செயற்குறிப்பினை ஆராய்ந்து அரசு தக்க முடிவெடுக்கும்.

திரு. கா. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையினைப் படித்துப் பார்த்தேன். தும்மனட்டி கிராமத்தில் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு மட்டும் நிவாரணத் தொகை அளிக்கப்படும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் ஏற்கெனவே தேயிலை விலை வீழ்ச்சியடைந்து, தேயிலை விவசாயிகள் கஷ்டப்பட்டு வருகிறார்கள். இந்த நிலையில் சென்ற மாதம் கோடை மழை பனிக்கட்டியோடு பெய்து, பல இலட்சம் ரூபாய் மதிப்புள்ள தேயிலைச் செடிகளும், பிற பயிர்களும் சேதமடைந்துவிட்டன. பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் உடனடியாக நிவாரணத் தொகை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-35

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30 ஆண்டுகளுக்கு முன்னால் இந்தப் பனிக்கட்டி மழை பெய்திருக்கிறது. மீண்டும் இந்தப் பனிக்கட்டி மழை ஊட்டியிலே பெய்திருக்கிறது என்று அறிக்கை வந்துகொண்டிருக்கிறது. 4-4-2002 அன்று பெய்த பனிக்கட்டி மழையின் காரணமாக 370 விவசாயிகளுக்கு

சேதம் ஏற்பட்டிருப்பதாகவும், கிட்டத்தட்ட 134 ஹெக்டேர் நிலங்கள் சேதம் அடைந்ததாகவும் மாவட்ட ஆட்சியர் மூலமாக அறிக்கைகள் வரப்பெற்றிருக்கின்றன. ஆகவே இந்த அறிக்கைகளின் அடிப்படையில் அரசு நடவடிக்கை எடுக்கும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின், 2001-2002 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்து ஆறாவது முதல் எழுபத்து ஒன்பதாவது வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2001-2002 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்து ஒன்றாவது முதல் இருபத்து ஆறாவது வரையிலான ஆறு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2001-2002 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஒன்று முதல் ஆறு வரையிலான அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.